**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.403/2024 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எஸ்.பி.சந்திரசேகரன் | வட்டம் | : | மொடக்குறிச்சி |
| த/பெ | : | எஸ்.சி.பொன்னுசாமி | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | நஞ்சை ஊத்துக்குளி | வயது | : | 60 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் 2-ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

20.02.1976-ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 27.06.1983-ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 02.05.2024-ம் தேதியிட்ட நஞ்சை ஊத்துக்குளி கிராம நிர்வாக அலுவலர் அளித்த சான்றிதழ் (அசல்) **வா.சா.ஆ.3** ஆகவும், ரீ.ச.எண்.327-ன் பட்டா (கணினி நகல்) **வா.சா.ஆ.4** ஆகவும், ரீ.ச.எண்.327-ன் ஆ பதிவேடு (கணினி நகல்) **வா.சா.ஆ.5** ஆகவும், ரீ.ச.எண்.327-ன் புல வரைபடம் 327 (கணினி நகல்) **வா.சா.ஆ.6** ஆகவும், ரீ.ச.எண்.328/1 to 6-ன் பட்டாக்கள் (கணினி நகல்) **வா.சா.ஆ.7** ஆகவும், ரீ.ச.எண்.328-ன் புல வரைபடம் (கணினி நகல்) **வா.சா.ஆ.8** ஆகவும், ரீ.ச.எண்.328/1 to 6-ன் ஆ பதிவேடு (கணினி நகல்) **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.